## 12.8 ஊராக உள்ளாட்சிஅமைப்புகளுக்கு 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் தவணைத் தொகை ரூ.87.00 கோடி விடுவித்தல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி2) துறை

அரசு ஆணை (நிலை)எண். 157 நாள் : 30.10.2006

படிக்க :

a. பனிரெண்டாவது நிதிக்குழு வழிகாட்டு நெறிமுறைகள்
b. அரசு ஆணை (நிலை) எண். 12, ஊரக வளர்ச்சித் துறை நாள், 3.2.2006
c. அரசு ஆணை (நிலை) எண். 18, ஊரக வளர்ச்சித் துறை நாள். 10.2.2006
d. அரசு ஆணை (நிலை) எண். 34, ஊரக வளர்ச்சித் துறை நாள். 30.3.2006
e. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் ந.க. எண். 47292/06 பரா அ. 2 (3) நாள்.16.6.2006

**ஆணை**

1.. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மத்திய அரசினால் அனுப்பப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பனிரெண்டாவது நிதிக் குழுவின் 2005–2006 முதல் 2009–2010 வரையிலான காலத்திற்கு ரூ.870,00 கோடி ஒதுக்கிடு குறித்த விபரங்களும் மற்றும் நெறிமுறைகளும் தெரிவிக்கப் பட்டுள்ளன. இப்பரிந்துரைகளில் தமிழ்நாட்டிற்கு பனிரெண்டாவது நிதிக் குழு மானியமாக ஒவ்வொரு ஆண்டுக்கும் ஊராட்சி அமைப்புகளுக்கென்று ரூ.174.00 கோடி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

2. பார்வை 2, 3 (ம) 4–ல் படிக்கப்பட்ட அரசானைகளில் 2005–2006 ஆண்டிற்கான பனிரெண்டாவது நிதிக்குழு மான்யம் 174.00 கோடி ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கு விடுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

3.2006–2007ம் ஆண்டுக்கான பனிரெண்டாவது நிதிக் குழு மானியமாக முதல் தவணைத் தொகை, ரூ.87.00 கோடியை கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளில் கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 2001ம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் 80:20 என்ற விகிதத்தில் விடுவிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் கோரியுள்ளார்.

**கிராம ஊராட்சிகள் (Village Panchayats 80%)** 69.60

3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 197 வளர்ச்சி வட்டார ஊராட்சிகள் இடைநிலை ஊராட்சிகளுக்கு நிதி உதவி பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் ஐஐ மாநிலத்திட்டம் துனு பனிரெண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் 09 உதவி மானியங்கள் 01 நடப்புச் செலவுக்கான மானியங்கள்
(து.தொ.கு.என்.3640–00–197–JD–0915)

**ஊராட்சி ஒன்றியங்கள் (Panchayat Unions 20%)** 17.40

3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 197 வளர்ச்சி வட்டார ஊராட்சிகள் இடைநிலை ஊராட்சிகளுக்கு நிதி உதவி பத்தாம் ஐந்தாண்டு திட்டம் பணிகள் மாநிலத்திட்டம் பனிரெண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் 09 உதவி மானியங்கள் 01 நடப்புச் செலவிக்கான மானியங்கள்
(து.தொ.கு.என்.3640–00–197–JC –0917)

மொத்தம் 87.00

4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு பரிசீலித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது நிதிக் குழுவின் மானியத்தில் ரூ.87.00 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் தவணை தொகையாக கீழ்கண்டவாறு பிரித்து வழங்கலாமென முடிவெடுத்து அத்தொகையை அரசுவிடுத்து ஆணையிடுகிறது.

(1) கிராம ஊராட்சிகள் ரூ. 69.60. கோடி
(2) ஊராட்சி ஒன்றியங்கள் ரூ. 17.40. கோடி

5.மேலே பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ள நிதியை கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் உள்ளாட்சி ஒன்றியங்களுக்கும் 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் பிரித்து அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம்

அளித்து அரசு ஆணையிடுகிறது. பனிரெண்டாவது நிதிக்குழுவின் மானியத்தில் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படுவது முதல் செலவினமாக இருக்கப்பட வேண்டும். இந்த முதல் செலவினமாக வழங்கப்படும் மானியம் நிதி வசதி குறைந்த கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.1.50 என்ற அளவிலும் நிதி வசதி உள்ள கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 50 பைசா என்ற அளவிலும் வழங்கப்பட வேண்டும். இந்தச் செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைப்பதற்கும் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு) சென்னை–35 அலுவலகத்திலிருந்து பெற்று மாவட்டங்களுக்கு வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**கிராம ஊராட்சிகள் (Village Panchayats 80%)** (ரூபாய் கோடியில்)

3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும்
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 197 வளர்ச்சி வட்டார ஊராட்சிகள்
இடைநிலை ஊராட்சிகளுக்கு நிதி உதவி பத்தாம் ஐந்தாண்டு
திட்டம் பணிகள் ஐஐ மாநிலத்திட்டம் துனு பனிரெண்டாவது நிதி ஆணையத்தின்
பரிந்துரையின்படி கிராம ஊராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் 09
உதவி மானியங்கள் 01 நடப்புச் செலவுக்கான மானியங்கள்
(து.தொ.கு.என்.3640–00–197–JD –0915) 69.60

**ஊராட்சி ஒன்றியங்கள் (Panchayat Unions 20%)**

3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும்
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் –197வளர்ச்சி வட்டார ஊராட்சிகள்
இடைநிலை ஊராட்சிகளுக்கு நிதி உதவி பத்தாம் ஐந்தாண்டு
திட்டம் பணிகள் ஐஐ மாநிலத்திட்டம் துஊ பனிரெண்டாவது நிதி ஆணையத்தின்
பரிந்துரையின்படி ஊராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் 09
உதவி மானியங்கள் 01 நடப்புச் செலவுக்கான மானியங்கள்
(து.தொ.கு.என்.3604–00–197–JC –0917) 17.40

6. பனிரெண்டாவது நிதிக்குழு வழிமுறைகளைப் பின்பற்றி மேலே பத்தி 4–ல் விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டு சான்றிதழ்களை ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

7. இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 61311/குஊ–ஏ/2006. நாள் 23.10.2006 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்